# கலை மற்றும் அறிவியல் புலம்

## தமிழ்த்துறை

## திருக்குறள் செம்மல் ந.மணிமொழியனார் முத்தமிழாயம்

## இலக்கியப் பதாகை (பறப்பு-17)

### உலக மகளிர் தின சிறப்பு பட்டிமன்ற நிகழ்வு

தலைப்பு : இன்றைய சூழலில் பெண்கள் சமூக வலைதளங்களால் பெற்றவை அதிகமா? இழந்தவை அதிகமா?

தேதி : 13.03.2023

இடம் : உள் அரங்கம் (ஆறுபடைவீடு வளாகம்)

பங்கேற்பாளர்கள் : 180 பேர்




விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனம், கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை மற்றும் திருக்குறள் செம்மல் ந. மணிமொழியனார்

முத்தமிழாயத்தின் சார்பாக உலக பெண்கள் தினத்தையொட்டி சிறப்பு பட்டிமன்றம் 13.03.2023 திங்கள் கிழமை அன்று தமிழ்த்தாய் வணக்கத்தோடும், குத்து விளக்கேற்றலோடும், விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனத்தின் வேந்தர் டாக்டர். அ.ச.கணேசன், இயக்குநர் டாக்டர். அனுராதா கணேசன் ஆகியோர் நல் ஆசியுடன் விழா இனிதே துவங்கியது. விழாவின் துவக்கமாக முறையானதொரு வரவேற்புரையை தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ப. ஜெயபாரதி அவர்கள் வழங்கினார். தலைமை உரையினை கலை மற்றும் அறிவியல் புல இயக்குநர் முனைவர் T.H.நசீமா அவர்கள் பேசுகையில் பெண்மையின் உயர்வு குறித்தும் சமூகத்தில் பெண்களுக்கான பொறுப்புகளையும் சவால்களையும் உணர்ந்து வாழ்வில் பல வெற்றிகள் பெற வேண்டும் என்ற நோக்கில் பெண்கள் செயல்பட வேண்டுமென உரை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினர்களுக்கு பொன்னாடை மற்றும் நினைவு பரிசுகள் வழங்கப்பட்டன. பட்டிமன்ற நடுவர் வழக்கறிஞர் S.ராமன் தலைமையில் இன்றைய சூழலில் பெண்கள் சமூக வலைதளங்களால் பெற்றவை அதிகமா? இழந்தவை அதிகமா? என்ற தலைப்பில் நடைபெற்றது. இப்பட்டிமன்ற நிகழ்வில் இரு தலைப்பில் பேச்சாளர்கள் தங்களின் வாதத்தினை சிறப்புற முன்வைத்தனர். சமூக வலைதளங்களால் பெண்கள் பெற்றதே அதிகம் என்று நடுவர் அவர்கள் தீர்ப்பளித்து விழாவினைச் சிறப்புற நிறைவு செய்து வைத்தார்கள். விழாவின் நிறைவில் இளங்கலைத்தமிழ் இரண்டாமாண்டு மாணவி செல்வி. லோ.மகாலெட்சுமி அவர்கள் நன்றியுரை ஆற்றினார். அனைத்துத் துறை பேராசிரியர்கள் மற்றும் மாணவ மாணவியர்களின் நல் ஆதரவுடன் விழா இனிதே நிறைவு பெற்றது.


AVIT
SAS
Vinayaka Mission's
Research Foundation
GPS Map Camera
Chengalpattu, Tamil Nadu, India
M54H+JFP, Tamil Nadu 603104, India
Lat 12.65677°
Long 80.178905°
13/03/23 11:44 AM GMT +05:30
Google


AVIT
REDMI NOTE 9
GANA GOKUL



